17.04.2026
O.S.No. 78/2023
DW1– முருகேஸ்வரி– க/பெ. கணேசன்
Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.04.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. நான் மாரியம்மாளின் மூத்த மகள் என்றால் சரிதான். நான் 1985ல் பிறந்தேன், ஆனால் சரியாக ஞாபகம் இல்லை. வாதி வாரிசுசான்றிதழ் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியும். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது.

2. நான் இந்த வழக்கில் எதிரிடை கோரிக்கையாக வாரிசுசான்றிதழ் கேட்டுள்ளேன். 1986ல் எனது தாய்க்கும், நல்லையா என்ற நபருக்கும் தொடர்புள்ளதகாவும், அதை என்த தந்தை நேரில் பார்த்ததாகவும் என் தாய் தாக்கல் செய்த ஜீவனாம்ச வழக்கில் கூறியுள்ளார் என்றால் எனக்கு அது நேரடியாக தெரியாது, அவ்வாறு இருந்திருக்கவும் வாய்ப்பில்லை. அதற்கு அடுத்து எனது தாய்க்கு 2 பெண்குழந்தைகளும் பிறந்தது.

3. **நீதிமன்ற கேள்வி –** எனது தந்தை தாக்கல் செய்த எதிருரை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, நான் படித்துப்பார்க்கவில்லை.

4. நல்லையாவுக்கு பஞ்சாயத்தில் ரூ.300 அபராதம் விதித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது, அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. அதில் சன்னாசி என்பவரை சாட்சியாக விசாரித்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

5. எனது தாயும், தந்தையும் பிரிந்துதான் வாழ்ந்தார்கள் என்றால் சரியல்ல. எனது 2 வது சகோதரி பிறந்தபிறகும் எனதுதாய், நல்லையாவுடன் இருந்த தொடர்பை நிறுத்தவில்லை என்றால் அவ்வாறு தொடர்பே இல்லை. 18.07.1992 ல் எனது தாய் 3 குழந்தைகளையும் அழைத்து சென்று அவரது தகப்பனார் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். ஆனால் எனது தந்தையை சந்தித்துதான் செல்வோம். செலவுக்கு பணமும் கொடுப்போம்.

6. எனது தாயும், தந்தையும் சேர்ந்து வாழவில்லை என்றால் சேர்ந்து வாழவில்லை, ஆனால் எனது தாயின் இறுதிசடங்கை எனது தந்தை தான் செய்தார். எனது தந்தையை எனது தாய், தாயின் உறவினர்கள் சேர்ந்து ரூ.25 ஆயிரம் பணம் பறித்ததாக எனது தந்தை செங்கோட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. 1993–94 எங்கள் ஊர் பஞ்சாயத்தில் கலந்துகொண்டேனா என்றால் கலந்து கொள்ளவில்லை. எனது தந்தை, எனது தாயை சமுதாய கூட்டத்தில் வைத்து விவாகரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல, அவ்வாறு இருந்திருந்தால் என் தாய் என்னிடம் கூறியிருப்பார்.

7. என்னையும், எனது 2 வது சகோதரியையும் எனதுதந்தை தான் பராமரித்துவந்தார் என்றால் சரியல்ல. 1994 ல் வாதியை எனது தந்தை மறுமணம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல. வாதிக்கும், சுப்பையாவுக்கும் திருமணம் நடந்ததை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்கள் இருவருக்கும் திருமணம் ஆகவில்லை என்றால் சரியல்ல. மேற்படி இருவருக்கும் மீனா என்ற குழந்தை உள்ளது என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். மீனா வாதியின் சகோதரியின் குழந்தை என்றாலும், தத்து எடுத்து வளர்த்து வந்தவர் என்றாலும் சரியல்ல. என்னையும், என் சகோதரியையும் என் தந்தையும், வாதியும் வளர்த்து திருமணம் செய்துவைத்தார் என்றால் சரியல்ல.

8. என் தந்தை செங்கோட்டையில் உள்ள எங்கள் வீட்டில் வைத்துதான் இறந்தார். நான் 3ம் வகுப்பு வரை தான் படித்துள்ளேன். எனக்கு வீட்டின் கதவு எண் தெரியாது. இன்று வரை வாதி அந்த வீட்டில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, வீடு பூட்டிதான் இருக்கிறது.

9. 3ம் பிரதிவாதி வாதியை அடித்து வீட்டிலிருந்த ஆவணங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. செங்கோட்டையில் உள்ள வீடு எல்.ஐ.சி.யில் கடன் வாங்கி கட்டப்பட்டது என்றால் சரியல்ல, என் தந்தை கடன் வாங்கவில்லை. மேற்படி வீட்டு கடனை வாதி தான் செலுத்திவருகிறார் என்றால் சரியல்ல.

10. எல்.ஐ.சி.யில் நாமினியாக யாரை காண்பித்துள்ளார் என்றால் வாதியைதான் காண்பித்துள்ளார். என் தந்தை இறந்துபோன வீட்டில் வாதி தான் குடியிருந்துவருகிறார் என்றால் சரியல்ல, வீடு பூட்டிதான் உள்ளது.

11. வாதியின் இதர அடையாள அட்டைகள் அனைத்திலும் கணவரின் பெயரில் என் தந்தைபெயர் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் தாயின் இறப்புசான்றிதழில் கணவர் பெயரில் எனதுதந்தை பெயர்

உள்ளது என்பதை காட்ட இறப்புசான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

12. எனது தந்தை பணிபுரிந்த யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் நாமினியாக வாதியின் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதிலுள்ள பணத்தையும் வாதி தான் பெற்றார் என்றால் சரிதான். 1992லேயே குட்டிச்சாமி, எனது தாயை சமுதாய வழக்குப்படி விவாகரத்து செய்துவிட்டார் என்றும், அதற்குபிறகு 1994ல் வாதியை திருமணம் செய்துகொண்டார் என்றாலும் சரியல்ல.

13. வாதி மற்றும் 3 முதல் 6 பிரதிவாதிகள் எனது தந்தையின் வாரிசுகள் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**